**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20191017

## Maker Fair கண்காட்சியின் ஊடாக இலங்கை இளையோர் மத்தியில் புத்தாக்க கலாசாரத்தை அமெரிக்கத் தூதரகம் ஊக்குவிக்கிறது

**கொழும்பு, ஒக்டோபர் 17, 2019:** ட்ரேஸ் எக்ஸ்பேர்ட் சிட்டியில் (Trace Expert City) ஒக்டோபர் 20ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது Maker Fair கண்காட்சியில் இலங்கை முழுவதிலும் இருந்து இளம் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புத்தாக்க உருவாக்குனர்களை அமெரிக்கத் தூதரகம் ஒன்றிணைக்கவுள்ளது. பொறியியலை மையமாகக் கொண்ட இந்தக் கண்காட்சிக்கான நுழைவு அனைத்து வயதினருக்கும் இலவசமாகும். இளையோருக்கான புத்தாக்க செயலமர்வுகள் மற்றும் முன்னணி கல்வியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் தலைமையிலான குழுக் கலந்துரையாடல்கள் என்பன இந்த கண்காட்சியில் உள்ளடங்கியிருக்கும். இந்த Maker Fair கண்காட்சியில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையின் மிகப்பெரிய ரோபோ சமரும் (robot battle) காட்சிப்படுத்தப்படவுள்ளது.

"Maker Fair கண்காட்சியில் ரோபோ சமரை காட்சிப்படுத்த முடிந்திருப்பதையிட்டு நாம் மிகவும் உற்சாகமடைந்துள்ளோம்," என்று MakerSpace செயலாற்றுனர் ரஞ்சன் குலதுங்க தெரிவித்தார். "இந்தத் தளமானது தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் தொழில்களை தொடர்வதற்கு மேலும் பல இலங்கை இளைஞர்களுக்கு ஊக்கமளிக்க உதவுகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார். Maker Fair என்பது Makerspace களின் ஓர் அம்சமாகும் என்று விளக்கமளித்த அமெரிக்கத் தூதரகத்தின் பொது அலுவல்கள் அதிகாரி டேவிட் மெக்குவயார், "கொழும்பில் உள்ள எமது அமெரிக்க நிலையத்திலும் (American Center) கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறையில் உள்ள எமது தகவல்கூடங்களிலும் (American Corner) யாரும் எமது Makerspace நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பதிவு செய்துகொள்ள முடியும். புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் மேன்மைப்படுத்துவதற்குமே அவை வடிவமைக்கப்பட்டுள்ளன," என்றும் குறிப்பிட்டார்.

புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் தொழில்நுட்பம் மற்றும் வளங்களை வழங்குவதற்காக அமெரிக்கத் தூதரகம் அதனது Makerspace திட்டத்தை அமெரிக்க நிலையத்தில் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அங்குரார்ப்பணம் செய்திருந்தது. ஆர்வத்தின் அதிகரித்த வெளிப்பாடாக அதன் பெறுபேறுகள் அமைந்திருந்தன. இந்த முன்னெடுப்பின் பெரும் மதிப்பை இலங்கையின் இளைஞர் சமுதாயத்தினர், கல்வியாளர்கள் மற்றும் வர்த்தகத் தலைவர்கள் அடையாளங் கண்டுகொண்டனர். அவ்வாறனதொரு சாதகமான பிரதிபலிப்பை அடுத்து, இலங்கையின் முதலாது Maker Fair கண்காட்சியை அமெரிக்கத் தூதரகம் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கண்டியில் நடத்தியது. இலங்கையின் தொழில்முனைவு சுற்றுச்சூழல் அமைப்பைப் போன்றே உருவாக்குனர் கலாசாரமும் வளர்ச்சியடைந்துள்ளது. அந்த வகையில், இந்த வருட கண்காட்சியில்

65 இற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்பாளர்களும் அவர்களது கண்டுபிடிப்புகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையமானது, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறையில் உள்ள அமெரிக்க தகவல்கூடங்களுடன் இணைந்து தொழில்முனைவு, தலைமைத்துவம், ஆங்கில மொழிப் பயிற்சி, சமூக ஊடகம், முப்பரிமாண அச்சிடல் (3D printing), கோடிங் (coding) மற்றும் மேலும் பல விடயங்கள் தொடர்பில் இளையோருக்கு வழக்கமான நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் அனைவருக்கும் இலசமாகும். இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு Facebook இல் @AmCenterSL என்ற பதிவு வாசகத்திற்கு பிரவேசிக்கவும்.

**** Maker Fair கண்காட்சிக்கான நுழைவு இலவசமாகும் என்பதுடன், ஒக்டோபர் 20ஆம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை இந்த கண்காட்சி நடைபெறும்.***